## ஆண்டு முழுவதும் வருமானம்… அதிக பாடு இல்லாத அரளி…!

## 10.01.2014



எந்த விசேஷமாக இருந்தாலும் மலர்கள் பயன்படுத்தப்படுவதால், அவற்றின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதன் காரணமாக விற்பனை வாய்ப்பு உள்ள பயிர்களில், மலர்களும் முக்கிய இடத்திலிருக்கின்றன. இதனால், மலர் விவசாயிகளுக்கும் குறிப்பிடத் தகுந்த வருமானம் கிடைத்து வருவதால், சமீப காலமாக மலர் சாகுபடி அதிகரித்து வருகிறது.
பொதுவாக, மலர் சாகுபடிக்கு நல்ல தண்ணீர் வளம் இருக்க வேண்டும். என்றாலும், குறைவான தண்ணீர் வசதி உள்ள விவசாயிகளுக்கும் ஏற்ற மலர்கள் உள்ளன. அவற்றில் முதலிடத்தில் இருப்பது அரளி. தண்ணீர், பராமரிப்பு என அனைத்துமே அதிகளவில் தேவையில்லாததால் பலரும் அரளியை விரும்பி சாகுபடி செய்கிறார்கள். அவர்களில் ஒருவராக, இயற்கை முறையில் அரளி சாகுபடி செய்து வருகிறார், தருமபுரி மாவட்டம், கதிரிபுரம் கிராமத்தைச் சேர்ந்த மாயவன்.
பொம்மிடி –அரூர் சாலையில் எட்டாவது கிலோமீட்டரில் அமைந்திருக்கிறது, கதிரிபுரம். ஊருக்குப் போகும் சாலையில் பருத்தி, கரும்புத் தோட்டங்கள் அணிவகுக்கின்றன. அருகே உள்ள வயல்களில் கனகாம்பரம், ரோஜா என மலர்ந்து கிடந்த காட்சி, மாயவனின் அரளித்தோட்டத்துக்குக் கூடுதல் அழகைச் சேர்க்கிறது.

**சொல்லிக் கொடுத்த சொந்தம்**

குடும்பத்துல பாகம் பிரிச்சப்போ… அண்ணனுக்கும் எனக்கும் முக்கால் முக்கால் ஏக்கர் நிலம் கிடைச்சுது. ஒரே கிணத்துல தான் ரெண்டு பேருக்கும் பாசனம். எனக்குச் சொந்தமான முக்கால் ஏக்கர்ல, 10 சென்ட்ல சிவப்பு அரளி, 15 சென்ட்ல வெள்ளை அரளி போட்டிருக்கேன். மீதி நிலத்துல தென்னை மரங்களும், மாட்டுக்கு சோளமும், கொஞ்சம் மல்பெரியும் போட்டுருக்கேன். இது பூ சாகுபடிக்குப் பேர் போன பகுதி. நிறைய பேர் பூ மூலமாவே பெரிய அளவுக்கு வளர்ந்திருக்காங்க. ஊரைச்சுத்தி கல்வராயன், ஏற்காடு மலைகள் இருக்கிறதால எப்போதும் குளிர்காத்து வீசிட்டே இருக்கும். அப்பப்போ மழையும் பெஞ்சிடும். வழக்கமா சம்பங்கி, கனகாம்பரம், காக்னா(காட்டுமல்லி அல்லது காக்கரட்டான்), மல்லி, சாமந்தினு போடுவாங்க. நானும் காக்னா, கனகாம்பரம் போட்டிருந்தேன். ஆனால் அதையெல்லாம் பறிக்கறதுக்கு அதிக ஆளுங்க தேவைப்படுவாங்க. அவங்களை வெச்சு பறிச்சு முடிக்கிறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடும். பராமரிப்பும் அதிகம். தண்ணி இல்லேனா செடிகள் தாங்காது. நாலு வருஷத்துக்கு முன்ன நத்தம் மேடுங்குற ஊர்ல இருக்கிற சொந்தக்காரங்க ‘அரளிப்பூவை பயிர் செய்யுற வேலையும் குறைவு, விலையும்

நல்லா இருக்குனு சொன்னாங்க. அவங்ககிட்டயே நாத்துகள் வாங்கிட்டு வந்து நட்டேன். அதையே ஒட்டுப் போட்டு(பதியம்) செடிகள வளர்த்துட்டுருக்கேன். நூறு சதவிகித அரசு மானியத்துல சொட்டுநீர் போட்டிருக்கேன்.

**செலவைக் குறைத்த அமுதக் கரைசல்**

ஒட்டுப் போட்ட செடி மூணு மாசத்துல வளர்ந்திடும். அதுக்குப் பிறகு, செடியிலிருந்து பூ பறிக்க ஆரம்பிச்சுடுவேன். நிறைய பூ பறிச்சதும் தாய்செடியை வெட்டிவிடுவேன். செடி நல்லா வளந்துடுச்சுனா, ஒரு மாசம் வரைக்கும் தண்ணி இல்லேனா கூட தாங்கிடும். எந்த வேலைக்கும் ஆளுங்கள வைக்காம, எங்க குடும்பமே வேலை செஞ்சுடுவோம்.” என்ற மாயவன், அடுத்து சொன்ன விஷயம் அனைவரும் மனதில் ஏற்றிக் கொள்ள வேண்டிய மிக மிக முக்கியமான பாடம். அது-
“ஆரம்பத்துல நானும் ரசாயன விவசாயம் தான் பண்ணிட்டிருந்தேன். பொம்மிடி பக்கத்துல இருக்கிற அருண், இயற்கை விவசாயம், இடுபொருள் தயாரிக்கிறது பத்தியெல்லாம் சொல்லிக் கொடுத்தார். இப்போ நானே அமுதக் கரைசல் தயார் செஞ்சு உபயோகப்படுத்திட்டிருக்கேன். மகசூல் நல்லா இருக்குது. இத்தனை நாளா தேவையில்லாம உரத்துக்கு செலவு பண்ணிட்டோமேன்னு வருத்தமா இருக்கு.
இதைத் தொடர்ந்து, அரளி சாகுபடி செய்யும் முறைகளைச் சொன்னார் மாயவன். அதை அப்படியே பாடமாகத் தொகுத்திருக்கிறோம்.

***சீஸன் சமயத்தில் கிலோ 150 ரூபாய்!***

அரளிக்கு இருக்கும் வரவேற்பு குறித்துப் பேசிய சேலம், வ.உ.சி. மலர் சந்தையில் வியாபாரம் செய்து வரும் நாகராஜ், “ சந்தையில மல்லிக்கு அடுத்த இடம் அரளிக்கு தான். இங்க 200 கடைகளுக்கும் மேல இருக்கு. எந்த கடையில வேணும்னாலும் விவசாயிகள் கொண்டு வந்து போடலாம். அன்னிக்கு விலையில 10 % கமிஷன் எடுத்திட்டு, ரொக்கமா கொடுத்திடுவோம். இப்போ ஒரு நாளைக்கு 10 டன் அரளி வருது. குறிப்பா பனைமரத்துப் பட்டியிலிருந்து அதிகமாக வருது. அதுக்கடுத்து பொம்மிடி, பாப்பிரெட்டிப்பட்டி பக்கமிருந்து வரும். இங்கயிருந்த சென்னை பெங்களூருக்கு அதிகமா போகுது. வருஷம் முழுக்க வரத்து இருக்கும். சீஸன்ல கிலோ 150 ரூபாய் வரைக்கும் கூட விலை போகும். விடியற்காலை 3 மணிக்குத் தொடங்கி, சாயங்காலம் 5 மணி வரைக்கும் சந்தை இருக்கும்” என்றார்.

**திண்டுப் பாத்தி**

‘சாகுபடி நிலத்தில் செழுமையாகத் தொழுவுரத்தைக் கொட்டி உழுது… திண்டுப் பாத்தி முறையில் பார்களை அமைத்து, வாய்க்கால் அமைத்துக் கொள்ள வேண்டும். செடிக்குச் செடி 3 அடி, வரிசைக்கு வரிசை 5 அடி இடைவெளி இருக்குமாறு லேசாக மண்ணைப் பறித்து செடிகளை நடவு செய்ய வேண்டும். முதல் மூன்று மாதங்களுக்கு, வாரம் ஒரு பாசனம் செய்ய வேண்டும். தொடர்ந்து 15 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்தால் போதும். 15 நாட்களுக்கு ஒரு முறை பாசன நீருடன் ஏக்கருக்கு 200 லிட்டர் என்ற கணக்கில் அமுதக் கரைசலை (10 லிட்டர் மாட்டுச் சிறுநீர், 10 கிலோ மாட்டுச் சாணம்(பச்சையானது), ஒரு கிலோ நிலத்து மண், 10 பனம்பழம் அல்லது அரை கிலோ வெல்லம் ஆகியவற்றை 200 லிட்டர் தண்ணீரில் நன்றாகக் கலக்கி விட வேண்டும். 15 நாட்கள் தினமும் கலக்கி வந்தால் அமுதக் கரைசல் தயார்) பாசன

நீருடன் கலந்து விட வேண்டும். களைகள் மண்டினால், அவற்றை அகற்ற வேண்டும். சொட்டுநீர்ப் பாசனத்தில் களைகள் வளராது.

**மூன்று மாதங்களில் அறுவடை!**

நடவு செய்த மூன்று மாதங்களில் பூக்கத் தொடங்கும். செடியின் அடிப்பகுதியில் இருக்கிற வளர்ந்த கிளைகளை ஒடித்து, நிலத்தில் பதியம் போட்டு புதிய செடிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தாய் செடியில் பறிப்பு முடியும் போது, பதியம் போட்ட செடிகள் வளர்ந்து விடும். தாய் செடியை வெட்டி அப்புறப் படுத்தி விட்டு, புதிதாக வளர்ந்த செடியிலிருந்து பூக்களைப் பறிக்கலாம். மற்ற பூக்களைப் போலவே மொட்டாக இருக்கும் போதே பறித்து விட வேண்டும். செடி நம்மை விட உயரமாக இருப்பதால், நின்று கொண்டே பறிக்கலாம். பனிக்காலம் (டிசம்பர் மாதத்தில்) தவிர்த்து, மற்ற அனைத்து மாதங்களிலும் பூ பறிக்கலாம்.

**கூட்டணி அமைத்தால் கூடுதல் லாபம்!**

சென்னை, கோயம்பேடு மொத்த பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கச் செயலாளர் மூக்கையா என்கிற ரொண்டியன், திண்டுக்கல் சேலம் பகுதியிலிருந்து கோயம்பேட்டுக்கு அரளி வருது. ரெகுலரா வாங்கறதுக்கு ஆட்கள் இருக்காங்க. ஆனா விவசாயிங்க யாரும் நேரடியா கொண்டு வந்து விக்க மாட்டேங்கறாங்க. ஏஜென்ட் மூலமாத்தான் வருது. கோயம்பேடுல என்ன விலை இருந்தாலும், விவசாயிகளுக்கு ஒரு குறிப்பிட்ட விலையைத்தான் ஏஜென்டுங்க கொடுப்பாங்க. விவசாயிகள் பலரும் ஒண்ணா சேர்ந்து, பூக்களை சேகரிச்சு, ஒருத்தா மூலமா கொண்டு வந்து வித்தா... கூடுதல் லாபம் பார்க்க முடியும்" என்று கூட்டணி ஆலோசனை சொன்னார்.

**மாதம் 6 ஆயிரம் ரூபாய்!**

சாகுபடிப் பாடம் முடித்த மாயவன், "அரளி போட்டு மூணு வருஷம் ஆச்சு. சொந்தக் காரங்க கிட்ட இருந்து சும்மாவே நாத்து வாங்கிட்டு வந்துட்டேன். அதனால, அதுக்கு செலவு ஏதும் இல்ல. இதுக்குப் பெருசா பராமரிப்புச் செலவும் ஏதும் கிடையாது. 25 சென்ட்ல தினமும் 3 கிலோவுல இருந்து 4 கிலோ வரைக்கும் பூ கிடைக்குது. ஒரு மாசத்துக்கு சராசரியா 100 கிலோ பூ கிடைச்சிடும். தினமும் சேலம் பூ மார்க்கெட்டுக்கு இங்கயிருந்து வண்டி போகுது. அதுல போட்டு அனுப்பிடுவேன். சீஸனைப் பொருத்து, ஒரு கிலோ அரளி... 40 ரூபாயிலிருந்து 80 ரூபாய் வரை விலை போகும். வெள்ளை அரளிய விட, சிவப்பு அரளிக்கு கிலோவுக்கு 10 ரூபா அதிகமா கிடைக்கும். சராசரியா கிலோ 60 ரூபாய்னு வெச்சுக்கிட்டா, 100 கிலோ பூவுக்கு மாசம் 6 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்குது. 25 சென்ட் நிலத்தல இது நல்ல வருமானம் தானே!" என்றபடியே அடுத்த வேலைகளில் மூழ்கினார்.